REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: மார்கழி 2உ செவ்வாய் (17—12—57) ★ ★ வெளியூர்: மார்கழி 3உ புதன் (18—12—57) [இதழ் 159

### உலக மக்கள் தொகை—வரலாறு காணாத வளர்ச்சி!

வாஷிங்டன், டிச. 16—

கி. பி. 2000-ம் ஆண்டில், உலக மக்கள் தொகை சுமார் 600 கோடியாகலாம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறதாம்!

1951—55-ம் ஆண்டுகளுக்கிடையில் மக்கள் தொகை வளர்ச்சி 1·7 சதவிகிதமாக இருந்தது என்றும், சரித்திரத்திலேயே இதுவே அதிகமான விகிதம் என்றும் கூறப்பட்டிருக்கிறது. 1951-ம் ஆண்டில், 251,90,00,000 ஆக இருந்த மக்கள் தொகை 1955-ம் ஆண்டில், 269,10,00,000 ஆக உயர்ந்துள்ளது; அதாவது 17,20,00,000 அதிகம் என்றும், ஆனால், மரிப்போர் தொகை மிகக் குறைந்து வருகிறது என்றும் கூறப்படுகிறது.

# பெரியார்—நேரு சந்திப்பு தேவை

## ஒருவரையொருவர் தாக்கிக்கொள்வதில் பயனில்லை

## முற்போக்குக் கட்சிகள் ஒன்றுகூடி சாதி ஒழிப்புத் திட்டங்கள் வகுக்க வேண்டும்

## கலப்பு மணம் செய்தவர்கள் தைரியமாக சாதிமுறைகளைக் கண்டிக்காதது ஏன்?

### சேலம் ரோட்டரிசங்கத்தில் அண்ணா கருத்துரை

சேலம், டிச. 14—

சேலம் ரோட்டரி கிளப் கூட்டம் நேற்றுமாலை மாவட்ட ஆட்சி மன்ற 'போக்ஸ் ஹாலி'ல், திரு. இ. எ. ஹார்லோ தலைமையில் நடைபெற்றது.

அண்ணா அவர்கள் ஆங்கிலத்தில் பேசினார்.

அண்ணா அவர்களை உறுப்பினர்களுக்கு அறிமுகப்படுத்திவைத்து பேசுகையில், 'இந்தியா முழுவதிலும் புகழ்பெற்று அண்ணா விளங்குவார்' என, வழக்கறிஞர் அ. கணேச சங்கரன் குறிப்பிட்டார்.

அண்ணா அவர்கள் ஆங்கிலத்தில் பேசியதன் சுருக்கம் பின் வருமாறு:—

"சேலம் ரோட்டரி சங்கத்தில் பேச எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ரோட்டரி சங்கங்களைப் போன்ற நிறுவனங்களில் நான் அதிகமாகக் கலந்து கொள்ளும் வாய்ப்பு இல்லை; பொதுவாகக் கூட்டங்களில், நான் தமிழில்தான் பேசுவது வழக்கம்; இப்பொழுது ஆங்கிலத்தில் பேசுகிறேன். ஆங்கிலத்தை நாம் விட்டுவிட முடியாது. தாய் மொழி தமிழ் என்றாலும், ஆங்கிலத்தை நாம் விடமுடியாது.

"ரோட்டரி சங்கம் நல்ல கொள்கைகளின் அடிப்படையில் சமுதாயத்திற்குச் சேவைசெய்து வருகிறது. ஆங்கிலேயர் இந்த நாட்டிற்கு வந்தபொழுது ரோட்டரி சங்கம், செஞ்சிலுவைச் சங்கம், ஆங்கில மொழி ஆகியவை நம் நாட்டிற்கு வந்தன. ஆங்கிலேயர் நம்மைவிட்டுச் சென்ற பின்னும் இந்த மூன்றும் நம்நாட்டில் இருக்கின்றன. ஆங்கிலேயர் விட்டுச் சென்ற பல நன்மைதரக் கூடியவைகளில் இவை மூன்றும் சில; ரோட்டரி சங்கமும், செஞ்சிலுவைச் சங்கமும் நல்ல கொள்கைகளின் அடிப்படையில் சிறந்த முறையில் சேவை செய்து வருகின்றன.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிவுற்று, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வகுத்த பிறகு இந்தியப் பேரரசின் கஜானாவைத் திறந்து பார்த்தால் திட்டத்தை நிறைவேற்றப் போதிய பணமில்லை. வெளிநாட்டுக்குச் சென்று கடனுதவி பெற்றுவர மத்தியப் பேரரசின் நிதியமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய நாடுகளுக்குச் சென்றார்; பல கூட்டங்களில் பேசினார்; பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் இந்தியாவின் நிலையை விளக்கினார்; கடன் உதவி அளிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்; ஆனால் வெறுங்கையுடன் இந்தியாவுக்குத் திரும்பினார்.

"ரஷ்யா செயற்கைச் சந்திரனை பறக்கவிட்ட நேரத்தில் டி. டி. கிருஷ்ணமாச்சாரி அமெரிக்கா சென்றார்; ரஷ்யாவின் செயற்கைச் சந்திரன் மீது அமெரிக்கர்களின் கவனம் இருந்ததே தவிர, இந்தியாவைப் பற்றி இல்லை. அமெரிக்காவின் கவனத்தைச்சரியான முறையில் இந்தியாவின்மீது திருப்ப டி. டி. கே. தவறிவிட்டார்; தான் சென்ற காரியத்தைச் சாதிக்க முடியாமல் வெறுங்கையுடன் இந்தியா திரும்பினார். இதைக் கண்ட நேரு, 'வெளிநாட்டு உதவி இல்லாவிட்டால் இந்தியாவின் திட்டங்கள் ஒன்றும் கெட்டுவிடாது' என்று கூறுகிறார். அவ்வாறு கூறும் நேரு, வெளிநாட்டிலிருந்து பண உதவி பெற, கிருஷ்ணமாச்சாரியை ஏன் அனுப்ப வேண்டும்?

"இந்தியாவின் இராணுவ இலாகா அமைச்சரான வி. கே. கிருஷ்ணமேனன் ஐ. நா. சபையில் பேசி சிக்கலையும், குழப்பத்தையும் உண்டுபண்ணி இருக்கிறார். அமெரிக்கா சென்றதும், இரத்தக் கொதிப்பால் பாதிக்கப்பட்டுள்ள வி. கே. கிருஷ்ணமேனன் தனக்குண்டான இயல்பான குணத்தோடு பேசி இருக்கிறார்.

"அரசியலைப் பற்றி அக்கறை கொள்வதில்லை என்று சொல்வது ஒருவித நாகரீகம் என வியாபாரிகள், அதிகாரிகள் முதலானோர் நினைக்கிறார்கள்-அரசியலைப் பற்றி அவர்கள் அக்கறை கொள்ளாவிட்டாலும், அரசியலைப் பற்றி அவர்கள் அக்கறை கொள்ளும்படி அவர்களை அரசியல் செய்துவிடுகிறதே! ஆகவே, அரசியலில் அக்கறை கொள்வதில்லை என்பதை விடுத்து வியாபாரிகள், அதிகாரிகள் ஆகியோர், அரசியலில் அக்கறை கொள்ள வேண்டும்; ஆனால் அவர்கள், அரசியலில் பங்குகொள்ள வேண்டும் என்று நான் சொல்லவில்லை.

கடந்த இரண்டு வார காலமாக திராவிடர் கழகத் தலைவர் பெரியார் அவர்களின் சட்டபுத்தக எரிப்பு இயக்கம் பற்றி தென்னாட்டில் பேசப்படுகிறது. தென்னாட்டுக்கு வருகை தந்த பண்டித நேரு, உணர்ச்சி வேகத்தில் தகாத வார்த்தைகளால் பெரியார் அவர்களைத் தாக்கிப் பேசியிருக்கிறார். பண்டித நேருவின் தாக்குதலான வார்த்தைகளுக்குப் பதிலளிக்கும் முறையில் பெரியார் அவர்களும் பண்டித நேருவைக் கடுமையாகத் தாக்கிப் பேசி இருக்கிறார்.

"பெரியாரைத் தாக்கிப்பேசிய நேரு, முடிவில் என்ன சொன்னார் என்பதைக் கவனிக்கவேண்டும்; 'சாதிகளே கூடாது' என்று சொல்லியிருக்கிறார். 'சாதிகள் கூடாது' என்று கூறும் பண்டித நேருவும், பெரியார் ஈ. வே. ரா.-வும் ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசிக் கொள்வானேன்?

"பெரியார் ஈ. வே ரா.-வும், பண்டித நேருவும் ஒருவரை ஒருவர் சந்தித்துப் பேசி பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளலாம்; வீணாக விவாதத்திற்காகப் பேசுவதில் பலனில்லை.

"'சாதிகள் வேண்டும்' என்று யாரும் கூறவில்லை; 'சாதிகள் கூடாது' என்றுதான் எல்லோரும் கூறுகிறார்கள். சாதிகளை எவ்வாறு ஒழிப்பது என்பதற்கான முறைகளில்தான் வித்தியாசம் காண்கிறோம். ரோட்டரி சங்க உறுப்பினர்கள் ஒன்றுகூடி விவாதித்துப் பேசி, சாதிகள் ஒழிவதற்கான திட்டங்களை வகுக்கலாம்.

"ஒருபுறம் பஞ்சம்; மற்றொரு புறம் விலைவாசி உயர்வு போன்ற பிரச்சினைகளை தற்போதுள்ள மக்கள் சமாளிக்கவேண்டியுள்ளது. இந்தப் பிரச்சினைகளுக்கு எப்படி முடிவு காண்பது என்பது தற்போதுள்ள மக்களின் பொறுப்பாகும். இந்தப் பிரச்சினைகளை சமாளிக்கும் வாய்ப்பு மக்களுக்கு உள்ளது.

"ஒவ்வொரு வாக்காளரும் அரசியலைப் பற்றி நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும். அரசியலைப் பற்றி நன்றாகத் தெரிந்துகொள்வதில் தவறில்லை. ஒவ்வொரு வாக் வாக்காளரும் தங்கள் கருத்துக்களைத் தைரியமாகச் சொல்லவேண்டும்.

"பொதுமக்களின் அன்றாடப் பிரச்சினையையும் ரோட்டரிசங்கங்கள் விவாதித்து அவற்றிற்குப் பரிகாரம் காண வழி தேடவேண்டும். முக்கியப் பிரச்சினையாக விளங்கும் சாதிப் பிரச்சினையைப் பற்றி நல்ல முடிவு காண்பதற்கான திட்டங்களை ரோட்டரி சங்கங்கள் வகுத்துக்கொடுக்கலாம்."

திருவாளர்கள் எம். வி. கோபால் (செட்டியார்), டாக்டர் எஸ். ஆர். ராஜாராம், அனுமந்தராவ், டி. என். சம்பத்குமாரன் ஆகிய ரோட்டரி சங்க உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"சில அரசியல் கட்சிகள், வியாபாரிகளிடத்தில் பணத்தை வாங்கி ஏழைகளுக்குக் கொடுத்து, வாக்குகளை விலைக்கு வாங்குகின்றன. அரசியல் கட்சிகள் நல்ல ஒழுக்கத்துடனும் பண்பாடுடனும் நடந்துகொள்ளும்படி செய்வது வாக்காளர்களுடைய கடமையாகும். வாக்காளர்கள் தங்கள் பொறுப்பை சரியாகச் செய்யாவிட்டால், 'வாக்காளர்களை எவ்வாறு ஏமாற்றி வாக்குகளைப் பெறுவது' என்றுதான் அரசியல் கட்சிகள் நினைக்கும்.

"வியாபாரிகள் அரசியலைப் பற்றி அக்கறை கொள்ள வேண்டும்; தங்கள் கொள்கைகள் என்னவென்பதை வியாபாரிகள் சுதந்தரமாக வகுத்துக் கொள்ளவேண்டும்.

"அரசியல் கட்சித் தலைவர்கள் ஒருவருக்கொருவர் விவாதம் நடத்திக்கொண்டு இருந்தால் பிரச்சினைகளில் முடிவு காண முடியாது. பெரும்பான்மை—சிறுபான்மை என்பதை மறந்து அரசியல் கட்சித் தலைவர்கள் உட்கார்ந்து ஒருவருக்கொருவர் பேசினால் பிரச்சினைகள் தீரும். இவற்றை நடைமுறையில் நான் கண்டிருக்கிறேன். அதை விடுத்து விவாதம் மட்டும் நடத்தினால் முடிவு காண முடியாது.

"சட்டப் புத்தக எரிப்பு போன்ற இயக்கங்களில் நான் பங்கு கொள்ளவில்லை; அவற்றை ஆதரிக்கவுமில்லை.

"அரசியல் சட்டத்தில், சாதிகள் இல்லை என்று கூறப்பட்டுள்ளது; அதே அரசியல் சட்டத்தில் சாதிகளையும், மதங்களையும் காப்பாற்றவும் உறுதிமொழி அளிக்கப்பட்டிருக்கிறது. சாதிகளைப் பற்றி அரசியல் சட்டத்திலேயே முன்னுக்குப் பின் முரணாக உள்ளது.

"சிலருக்கு, பாட்டுகளில் கீர்த்தனை ராகம் பிடிக்கும்; சிலருக்குப் பிடிக்காது; தெம்மாங்கு, தில்லானா பாட்டுகள் பெரும்பாலும் பிடிக்கும். அதேபோல, சாதிகளை ஒழிக்க சட்டத்தை எரிப்பதன் மூலம் காரியத்தைச் சாதிக்க முடியும் என்று திராவிடர் கழகத்தினர் எண்ணுகிறார்கள்; அது அவர்களுடைய எண்ணம்.

"திரு. சி. இராசகோபாலாச்சாரியார் தன் மகளுக்குக் கலப்புத் திருமணம் செய்துவைத்தார்; டாக்டர் பி. சுப்பராயன், சி. சுப்பிரமணியம் முதலியவர்களும் கலப்புத் திருமணம் செய்து கொண்டார்கள்; சாதிகள் இல்லை என்பதை இவர்கள் தைரியமாக மேடைகளில் பேச வேண்டும். எல்லா முற்போக்கு சக்தி உடைய கட்சிகளும் ஒன்றுகூடிப் பேசி, சாதிகளை ஒழிப்பதற்கான திட்டங்களை வகுக்க வேண்டும்."

அண்ணா அவர்கள், ரோட்டரி சங்கத்தில் பேசப்போகிறார்கள் என்பதைக் கேள்விப்பட்டதும், ஏராளமான மக்கள், மாவட்ட ஆட்சி மன்ற 'போகிஸ் ஹாலு'க்குள் கூடிவிட்டனர்.

அண்ணா அவர்கள் ஆங்கிலத்தில் பேசியதை பார்வையாளர்களும், ரோட்டரி சங்க உறுப்பினர்களும் அமைதியாகக் கேட்டனர்.

ரோட்டரி சங்க உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்கு அண்ணா அவர்கள் விளக்கமாகவும், தெளிவாகவும் பதில் சொல்லியதையும் பார்வையாளர்கள் அமைதியாகக் கேட்டனர். (ந. கி.)

## நியாய விலைக் கடைகளில் அரிசி!

### தரப்படும் அளவு குறைக்கப்படுமாம்!

புதுடில்லி, டிச. 16—

முடிந்த எல்லாவகைகளாலும் அரிசி உபயோகத்தைக் குறைக்குமாறு, மாநில சர்க்கார்களுக்கு மத்திய சர்க்கார் தாக்கீது அனுப்பியிருப்பதாக மக்கள் சபையில் உணவு இலாகா உதவி மந்திரி ஏ.எம். தாமஸ் தெரிவித்திருக்கிறார்.

அரிசி உணவு கொள்ளப்படும் இடங்களில், தாராளமாகக் கோதுமை உண்ண பழக்கப்படுத்தப்படுகிறது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

நியாயவிலைக் கடைகளில் தரப்படுகிற அரிசி, சென்னை, பம்பாய், கல்கத்தா முதலிய நகரங்களில் குறைக்கப்படுமென்றும் அவர் கூறியிருக்கிறார்.

உணவுப் பொருள்களில் பெரும் அளவு வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கும் வியாபாரிகளுக்கு அந்த வர்த்தகத்தை நடத்த 'லைசென்ஸ்' வழங்கப்பட வேண்டும் என்ற சென்னை சர்க்காரின் திட்டம் ஒன்றை மத்திய சர்க்கார் பரிசீலித்துக் கொண்டிருப்பதாகவும், இதன் மூலம் அரிசி, நெல் முதலியவற்றை கொள்கை இலாப நோக்குடன் முடக்கிவைத்து வியாபாரம் செய்வதைத் தடுக்க முடியும் என்று சென்னை சர்க்கார் கருதுவதாயும் உணவு மந்திரி ஏ. பி. ஜெயின் கூறியிருக்கிறார்.

### உதவி நிறுத்தப்படும்?

பெல்கிரேட், டிச. 16—

யூகோஸ்லேவியாவுக்கு அமெரிக்கா அளிக்கும் இராணுவ உதவி நிறுத்தப்படுமென்று உறுதியாகத் தெரியவருகிறது.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 17—12—57 செவ்வாய்

# அனைத்துக்கும் ஒரே நாமம்!

மேட்டூர்ப் பகுதியில் அலுமினியத் தொழிற்சாலைத் துவங்கப்படும்.

தொழிற்சாலைக்குத் தேவையான இடத்தை தேர்ந்தெடுத்தாகிவிட்டது! தொழிற்சாலை இயங்குவதற்குத் தேவைப்படும் மின்சாரத்தை, மேட்டூர் மின்சார உற்பத்தி நிலையத்திலிருந்து அளிக்க சென்னை அரசாங்கம் ஒப்பிவிட்டது.

அலுமினியத் தொழிலுக்குத் தேவைப்படும் மூலப் பொருளான பாக்சைட் வெட்டி எடுக்கப்பட்டு, பரிசோதனைக்கு அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அம் முடிவு தெரிந்ததும் தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டு அலுமினிய உற்பத்தி துவங்கப்படும்.

★

மேட்டூரில் காகிதத் தொழிற்சாலை ஒன்று துவங்குவதற்குரிய அனுமதி தனி நபர் ஒருவருக்கு அளிககப்பட்டிருக்கிறது.

விரைவில் காகிதத் தொழிற்சாலை துவங்கப்படும்.

★

சேலம் பகுதியில் கிடைக்கும் இரும்புக் கனிப் பொருளைககொண்டு தேனிரும்பு உற்பத்தி செய்யபபடும்.

அதற்காக, நால்வர், உரிமை பெற்றுள்ளனர்.

★

நெய்வேலியில் செயற்கை உரத் தொழிறசாலை ஒன்று இரண்டாவது ஐந்தாணடுத் திட்டத்தில் நிர்மாணிக்கபபட்டு உர உற்பத்தி நடைபெறும்.

இதற்குத தேவையான மூலதனததை சோவியத் ரஷ்யா கொடுத்துதவுகிறது.

★

இவ்வளவும், காங்கிரசுத் தலைவர்கள் எனப்படுகிறவர்களால் வாககளிக்கப்பட்டவை.

தேர்தலுக்கு முன்னால், இவ்வாசை மொழிகளைககூறித்தான, தமிழ் மக்களின புனிதமான வாக்குகளைத் தேவைககதிகமாக, தங்கள கட்சிககு ஆதரவாகப் பெற்றனர், காஙகிரசு தலைவர்கள் எனப்படுகினறவர்.

அலுமினியத தொழில், தேனிருமபுத் தொழில், காகிதத் தொழில, செயற்கை உரத் தொழில—இபபடி ஒவ்வொனறையும் பலமுறை சொல்லிச் சொலலி, தமிழ் மக்களின் வாக்குகளைக் கோரினர் காஙகிரசுத தலைவர்கள் என்போர், தேர்தல் காலததில்.

அலுமினியத் தொழில் என்ற சொல, காஙகிரசார் வாயிலிருந்து கிளமபினது கேட்டதும் தமிழ் மககள் பூரிததுப் போயினர் — மனக்கோட்டை பலப் பல கட்டலாயினர்.

அலுமினியத் தொழிலுக்கான மூலபபொருளாம பாகசைட்டைத் தோண்டி எடுப்பதில், அதுவரை வேலையின்றி சோமபிக்கிடந்த பல்லாயிரவர், அகமும முகமும் மலர சுறுசுறுபபாக ஈடுபட்டு இருக்கும இன்பக் காட்சியைத் தம தம மனக்கண்ணால் கண்டு களிக்கத் தொடங்கினர் தமிழ் மக்கள்.

அலுமினியத் தொழிற்சாலை இரைச்சலுடன் ஒய்வு ஒழிவு இன்றி இருபத்திநான்கு மணி நேரமும் இயங்குவதையும், பல நூறுபேர் அத்தொழிற்சாலையில் துடிதுடிப்புடன் பணி புரிந்துவரும் திருக்கோலத்தையும், அத்தொழிலாளர் கைபட்டு அதுவரை மண்ணோடு மண்ணாகக் கிடந்துவந்த பாக்சைட், கண்கவரும் அலுமினியத் தகடுகளாகக் கண்ணைப் பறிக்கும் பளபளப்புடன் மலை போல் அடுக்கிவைத்திருப்பதையும், கற்பனை செய்து பார்த்துப் பார்த்துப் பூரித்துப் போயினர் தமிழ் மக்கள.

அலுமினியநகராம் என்ற பெயரில் கள்ளியும் முள்ளும் முளைத்துக் காடுமூரடாகக கிடந்து வந்த அத்தொழிற்சாலை அருகில், அழகிய நகரம் ஒன்று அமையும் திருக்காட்சியையும் தமிழ் மக்கள் உள்ளக் கண் கொண்டு பார்த்து பெருமகிழ்வு எய்தி இருந்தனர்.

சேலம் மாவட்டம் முழுவதும், அதுவரை மூலைமுடுககுக்குச் சிலராகக்கூடி, வானம பார்த்த விவசாயத்தை மட்டுமே நம்பி, காலம்வந்து சாகாது உயிருடன் இருந்துவந்த மக்கள் பெருங் கூட்டம், மேட்டூர்ப் பகுதியில் குடியேறி, கோலாகல வாழ்வு வாழ்வதுபோல் தமிழ் மககள் கனவு காணத் தொடங்கினர்.

அதுவுமன்றி, இருக்கும் விவசாயத்தைச் செய்துவர இருவர் போதுமென்றால், பதினமர் அந்த விவசாயத்தில் ஈடுபட்டு, ஒருநாள் உண்டதும்—அதிலும் அரைவயிறு கால் வயிறு என்று உண்டதும்—பலநாள் பட்டினிகிடந்து நலிவதுமாக இருந்துவந்த நிலை மாறி, விவசாயம் செய்யவே ஆள் கிடைக்காது, விவசாயம் செய்ய மேட்டூர்ப் பகுதியில் ஆள் தேடுவதும், அங்கும ஆள் கிடைக்காது பனம உடைவதும போன்ற புதுமைக் காட்சிகள் பலவற்றைத் தமிழ் மக்கள கனவுகாணத் தொடங்கினர்.

பிற மாவட்டத்தினர் பிழைப்புத் தேடி சேலம மாவட்டம் புகுவதும், மேட்டூர்ப் பகுதியில் நுழைவதும் போனற திகைப்பூட்டும் சம்பவங்களைக் கற்பனைசெய்து பூரித்து மகிழ்ந்ததுடன் நில்லாது, வேலைதேடி பம்பாய், இலங்கை, பர்மா, மலாயா போன்ற இடங்களுககெல்லாம், சென்றிருந்தவர்கள், புதுத் தெமபுடன் சேலம மாவட்டத்திற்கு விரைந்து வருவதையும், துவககப்பட்டுள்ள நவ நவமான தொழிற்சாலைகளில் விதவிதமான பணி பெறுவதையும், விநாடிக்கு விநாடி கனவாகக கண்டு களித்து வந்தனர் தமிழ் மக்கள்.

அந்தோ! அவ்வளவும் இன்று கானல் நீராகிவிட்டது!

தேர்தலுக்குமுன் நம்பிக்கை யூட்டிய காங்கிரசுத் தலைவர்கள் எனப்படுவோர், நமபிக்கைத் துரோகம் செய்யத் துணிந்து விட்டனர்!

அனைத்தும் இல்லை—அலுமினியத் தொழிற்சாலை கிடையாது—காகிதத் தொழிற்சாலை நிச்சயமாகக் கிடையாது—தேனிரும்புத் தொழிற்சாலை ஒன்றே ஒன்றுதான் உருவாகக் கூடும்—மற்ற மூன்று கண்டிப்பாகக் கிடையாது—நெய்வேலி செயற்கை உரத் தொழிற்சாலையும் கிடையாது—இவ்வளவும் கிடையாது--கிடையாது-கிடையாது--என்று இந்தியப் பேரரசு சொன்னதை—இல்லை—வடவர் ஏகாதிபத்தியம் இட்ட கட்டளையை—தமிழகத்திலே ஆட்சி செலுத்துகிறோம் என்ற பகட்டான பெயரில், பாவை அமைச்சராக இருந்துவரும் கனம் வெங்கட்ராமன் அவர்கள், பறை ஏந்தாது தமிழ் மக்களுக்கு பறை அறைவித்து இருக்கின்றார்!

அனைத்துக்கும் பட்டை நாமம்! தமிழ் மக்களுக்கு நாமம் சாத்தும் பணியை, திகைக்காது திடுக்கிடாது, வாடாது நடுங்காது, துன்புறாது துவளாது, அமைச்சர் வெங்கட்ராமன் அவர்கள் திறம்படச் செய்திருக்கின்றார்.

## பிராட்வேயில் உள்ள தொழிற் கல்வி நிலையம்

### கிண்டிக்கு இடம் பெயரும்

சென்னை, டிச. 14—

சென்னை-பிராட்வேயில் உள்ள பல்துறை தொழிற் கல்வி நிலையம் இனி, கிண்டிக்கு மாற்றப்படும் என்று தெரியவருகிறது.

கிண்டியில் முடிவடைந்துவரும் 'தொழில் எஸ்டேட்'டில் இது இடம் பெறலாம்; அல்லது, அருகாமையில் குடி அமர்த்தப் படலாம் என்றும் கூறப்படுகிறது.

இடமாற்றத்தின் நோக்கம், மாணவர்கள், கிண்டி தொழில் எஸ்டேட்டில் பல்வேறு தொழில்களையும்பற்றி நடைமுறை அறிவு பெற முடியும் என்பதுதான் என்று கூறப்படுகிறது.

### பிணியால் பரிதவித்தோரிடமிருந்து

## ரூ. 50,000 இலாபமா?

புதுடில்லி, டிச. 16—

வட இந்தியாவில் பிமபிரி என்னும் பகுதியில் 'பென்சிலின்' மருந்துகள் தயாரிக்கப்படுகிறது. இதை அரசாங்கமே நடத்தி வருகிறது.

இந்தத் தொழில், 1956-57-ம் ஆண்டுக்கான கடன் வட்டித் தொகை, கழிவுத் தொகை நீங்கலாக மொத்தம் ரூ. 58,000 இலாபம் தந்துள்ளது என்று தொழிலியல் துணை அமைச்சர் சதீஸ் சந்திரா மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

## கட்டாயமாக்குவதற்கு சட்டம் உருவாகுமாம்!

புதுடில்லி, டிச. 16—

வேலை தேடித்தரும் நிறுவனங்களுக்கு, காலியாகும் வேலை வாய்ப்புகள்பற்றி அறிவிப்பதைக் கட்டாயமாக்கும சட்டம் ஒன்றைக் கொண்டுவருவதுபற்றி மத்திய அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது என்று உதவித் தொழில் அமைச்சர் மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

## உற்பத்தியைக் குறையுங்கள்!

நாம் உணவு உற்பத்தியை அதிகரித்தாகவேண்டும; அதே போல, மின்சாரம், நிலக்கரி, நுகர் பொருள் முதலியவற்றின் உற்பத்தியையும பெருக்க வேண்டும். ஒன்றே ஒன்றில் மட்டும உற்பத்தியைக் குறைக்க வேண்டும். மக்கள் தொகை அதிகரிப்பதை நாம் கட்டுப் படுத்தியாகவேண்டும''

என்று பண்டித நேரு அவர்கள் கல்கத்தா கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

# மேட்டூரில் அலுமினியம் தொழிற்சாலை நிறுவ ரூ. 12 கோடி செலவாகுமாம்!

### பிரெஞ்சு நிறுவனத் திட்டம் ஆராயப்படுகிறதாம்

புதுடில்லி, டிச. 16—

சேலம் மாவட்டத்தில் மேட்டூர் பகுதியில் அலுமினியம் உற்பத்தித் தொழிற்சாலை நிறுவ சாதக சூழ்நிலை இருந்துவருவதைப் பல ஆண்டுகளாக மக்கள் எடுத்துரைத்து வருவது தெரிந்ததே.

இந்தத் தொழிற்சாலை நிறுவுவதற்கு உதவியளிக்க பிரெஞ்சு நிறுவனமொன்று முன்வந்துள்ளது என்றும், அந்தத் தற்காலிகத் திட்டம் ஆராயப்படுகிறது என்றும், மக்கள் சபையில் மத்திய கைத்தொழில் அமைச்சர் ஷா தெரிவித்துள்ளார்.

திட்டத்திற்கு ரூ. 12 கோடி செலவாகலாம் என்றும், 10,000 டன் அலுமினியம் ஆண்டுதோறும் கிடைக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

இப்போது இந்தியாவில் 12,500 டன் அலுமினியம் மட்டுமே ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப்படுகிறது என்றும், ஆனால் ஆண்டுதோறும் 40 000 டன் தேவைப்படுகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கிராமங்களுக்கு மின்சார வசதி

### சர்க்காரின் திட்டம் பற்றி ஒரு விவரம்

சென்னை, டிச. 15—

1965-ம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டில் 17,600 கிராமங்களுக்கு மின்சார வசதி கிடைக்கும் என்றும், இதுவரை 6,056 கிராமங்களுக்கு அந்த வசதி அளிக்கப்பட்டிருப்பதாயும் கூறபபடுகிறது.

1965-ம ஆண்டுக்குள், குந்தா, பெரியாறு, நெய்வேலி ஆகிய மின்சார உற்பத்தித் திட்டஙகள பூர்த்தியாகிவிடும் என்றும் கூறப்படுகிறது.

## ரஷ்ய உதவியுடன் தொழிற்சாலைகள்?

### இந்தியாவின் எந்தப் பகுதியில் அமையுமோ?

பெரிய இயந்திரஙகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை!

நிலக்கரிச் சுரங்கங்களில் உபயோகிக்கப்படும் இயந்திரத் தளவாடங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை!

மூக்குக் கண்ணாடிகள் தயாரிக்கும் தொழிற்சாலை!

இந்த மூன்று தொழிற்சாலைகளை இந்தியாவில் ஏற்படுத்த ரஷ்யா, 50 கோடி ரூபின (ரஷ்ய நாணயம்) கடனாகத் தரமுன் வந்துள்ளது.

இந்தத் தொழிற்சாலைகள் ஏற்கனவே கனரகத தொழில்கள பெருகியுள்ள வட இந்தியாவில அமையுமா, அல்லது பெயரளவில், அப்பளம், பொம்மை, மிதியடிகள் தயாரிகும் தொழில்கள அமைந்துள்ள தென்னாட்டில் அமையுமா என்பது அறிவிக்கப் படவில்லை.

## அரசாங்க அச்சகத்தில் வேலை நிறுத்தம்

ஊதிய உயர்வும், ஊழிய வசதியும் கோரி இந்திய அரசாங்க அச்சுத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்துள்ளனர்.

4,500 தொழிலாளர்களில் 300 பேர் மட்டுமே இன்று வேலைக்கு வந்தனராம்.

நாசிககில உள்ள இந்த அச்சகத்தில்தான் நோட்டுகள், அஞ்சல் தலைகள் முதலியன அச்சடிக்கப்படுகிறதாம்.

## இந்தி நாளிதழ் வரவில்லை

பாட்னா, டிச. 16—

பாட்னா தொழிலாளர் சங்கச் செயலாளரை பாட்னா இந்தி தினசரி 'விஸ்வாமித்ரா' நிர்வாகத்தினர் வேலையிலிருந்து நீக்கிவிட்டதன் காரணமாக தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்துள்ளனர்; அந்த இந்தி இதழ் வெளிவரவில்லை.

### நகரசபைப் பள்ளி மாணவர்க்கு

## இலவச பகல் உணவு

### எல்லாப் பள்ளிகளிலும் வழங்க ஏற்பாடு

சென்னை, டிச. 14—

சென்னை நகரசபை நடத்துகிற பள்ளிகளில், ஏழை மாணவர்களுக்குப் பகல் உணவு இலவசமாக வழங்குகிற திட்டத்தை, எல்லாப் பள்ளிப் பிள்ளைகளுக்கும் வழங்குவதென அதிகாரிகள் முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

இப்போது, நகரசபை நடத்துகிற மொத்தம் 288 பள்ளிகளில் 265 பள்ளிகளில் படிக்கும் 21 424 பிள்ளைகளுக்கு மட்டுமே உணவு வழங்கப்பட்டுவருவதாகவும், இனி, எஞ்சியுள்ள பள்ளிகளில் படிக்கும் பிள்ளைகளுக்கும் இலவசப் பகல் உணவு தரப்படும் என்று தெரியவருகிறது.

மேயர் திருமதி செரியன் கூட்டிய அதிகாரிகள் மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட இந்த முடிவு 16-ந் தேதியிலிருந்து அமுல் செய்யப்படும் என்று தெரியவருகிறது.

## சென்னை நகரசபையின்

### திட்டம் சேர்க்கப்படவில்லையாம்!

### திட்டக் குழுவுக்கு சர்க்கார் சுட்டிக்காட்டுகிறதாம்!

சென்னை, டிச. 16—

சென்னை மாநிலம் சம்பந்தப்பட்ட ஐந்தாண்டுத் திட்டத்தில், நகரசபையின் குடி தண்ணீர்த் திட்டம், சாக்கடைத் திட்டம் சேர்க்கப்படாததைச் சுட்டிக்காட்டி, திட்டக் குழுவுக்கு சென்னை சர்க்கார் எழுதியுள்ள ஓர் கடிதத்தில், இத்திட்டங்களுக்கு ரூ. 125 இலட்சம் கடன் தர, முன்பு மத்திய சர்க்கார் வாக்களித்திருந்ததையும் குறிப்பிட்டுள்ளனராம்!

## குடியிருப்பு வசதித்

### திட்டத்தின்கீழ் கடன் உதவி

சென்னை, டிச. 16—

குறைந்த வருமானக்காரர்களுக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டத்தின் கீழ் சென்னை நகரசபைக்கு ரூபாய் 3 25 இலட்சம் கடன்தர அரசாங்கம் ஒப்புதல் அளித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

இந்தத் தொகை கடனாகத் தரப்பட்டுள்ளது; 30 ஆண்டுகளில் திரும்பிச் செலுத்திவிட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இரண்டாவது திட்டத்தின்கீழ் ரூ 25 இலட்சம் செலவில் 360 வீடுகள் கட்டிமுடிக்க சென்னை நகர சபை திட்டமிட்டுள்ளது.

இதுவரை அரசாங்கம் அளித்துள்ள ரூ. 5 இலட்சத்தில் மொத்தம் 90 வீடுகள் கட்டிமுடிகும் நிலையில் உள்ளது.

## சென்னை நகரில்

### குடியிருப்புக் கட்டிடங்கள்

### புள்ளிவிவரங்கள் சேகரித்துத் தருமாறு கோரிக்கை

சென்னை, டிச. 16—

சென்னை நகரில் குடியிருப்புக் கட்டிடங்கள், மற்றவகைக் கட்டிடங்கள் பற்றி சரியான புள்ளி விவரங்களைச் சேகரித்துத் தருமாறு சென்னை அரசாங்கம் நகரசபையைக் கேட்டுக்கொண்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

# இராமநாதபுரம் மாவட்ட தி.மு. கழக மூன்றாவது மாநாடு

இராமநாதபுரம் மாவட்ட தி. மு. கழக 3-வது மாநாடு 1958 பிப்ரவரி திங்கள் 22, 23-ம் நாட்களில் தேவகோட்டையில் நடைபெறும்.

மாவட்டச்செயலாளர் தோழர் இ. ல. ம. சௌந்தரபாண்டியன் அவர்கள் மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராவார்.

மாநாட்டுச் செயலாளர்களாக, தோழர்கள் இராம. வெள்ளையன், மா. குருசாமி ஆகியோரும், பொருளாளராக, தோழர் நவமார்க்கண்டேயன் அவர்களும், தொண்டர் படைத் தலைவராகத் தோழர் க. தியாகராசன் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

மாநாட்டின் தலைவராக, பேராசிரியர் க. அன்பழகன் அவர்களை அழைப்பதெனவும்,

மாநாட்டின் திறப்பாளராக, தோழர் எஸ். எஸ். இராசேந்திரன் அவர்களை அழைப்பதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

# தமிழ் நாட்டில்

## கைவேலைத் தொழில்களில் பயிற்சி அளிக்கத் திட்டமாம்!

### மானியம் — கடன் தொகைகள் தரப்போகிறார்களாம்!

புதுடில்லி, டிச. 16—

பொம்மைகள், விளையாட்டுச் சாமான்கள் ஆகியவை உட்பட கைவேலைத் தொழில்களில் பயிற்சியளிப்பதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மேலும் பல பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப்படவிருக்கின்றன.

அகில இந்தியக் கைவேலைப் பொருள்கள் நிறுவனத்திற்கும், மாநில சர்க்கார்களுக்கும் மானியம் — கடன் தொகைகளாக ரூ. 4,50,000 அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

பனை ஓலைப் பொருள்கள் தயாரிப்பில் பயிற்சியளிப்பதற்காக தமிழ் நாட்டில் புலிகாட், நாகூர், ஈரோடு ஆகிய இடங்களில் மூன்று பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப்படவிருக்கின்றன.

சென்னையிலுள்ள மாதர் பணி மன்றத்தில் பொம்மைகளையும், வாழைநார், இதர நார் வகைகள் ஆகியவைகளிலிருந்து உபயோகப் பொருள்களையும் தயாரிப்பதில் பெண்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக அந்நிலையத்துக்கு ஒரு மானியம் வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் மேலும் மூன்று பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப்படவிருக்கின்றன. அவைகளில் இரண்டு நிலையங்கள் துணிப் பொம்மைகள் தயாரிப்பதற்காக இராமநாதபுரத்திலும், திருநெல்வேலியிலும் ஏற்படுத்தப்படும்; மூன்றாவது நிலையம் மரப் பொம்மைகள் தயாரிப்புக்காக அம்பாசமுத்திரத்தில் ஏற்படுத்தப்படும்.

கும்பகோணத்தில் 'கலம்காரி' அச்சடிப்பு வேலைப் பயிற்சி நிலையம் ஒன்று ஏற்படுத்தப்படும்.

## சென்னையிலா உயர்தர தொழில்நுட்பக் கல்லூரி?

சென்னையில் உயர்தர தொழில்நுட்பக் கல்வி நிலையம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான திட்டமொன்று ஆராயப்படுகிறது. இதற்காக இரண்டாவது திட்டத்தில் ரூ. 200 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதென்று மக்கள்சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## தாழ்த்தப்பட்டோருக்குக் குடியிருப்பு வசதி

### தரப்பட்ட உதவித் தொகையில் சென்னைக்குகிடைத்ததுஎவ்வளவு?

புதுடில்லி, டிச. 16—

தாழ்த்தப்பட்டோர்களுக்காக உதவித் தொகையுடன் குடியிருப்பு வசதி அமைத்துக் கொடுப்பதற்கான திட்டங்களுக்கு மொத்தம் சுமார் ரூ. 62 இலட்சம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது; அதில் ரூ. 31,60,000 மாநிலத் திட்டத்தின்கீழும், ரூ. 30,38,000 மத்திய சர்க்கார் நடத்தும் திட்டத்தின் கீழும் அனுமதிக்கப்பட்டுள்ளன" என்று, மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதில் சென்னைக்கு ரூ. 10,55,000 மட்டுமே கிடைத்திருக்கிறது.

## விழுப்புரத்தில் திரு. பி. டி. இராசன் நிகழ்ச்சிகள்

12—12—57-ல், விழுப்புர வர்த்தக நிறுவனத்தின் சார்பில் தமிழவேள் திரு. பி. டி. இராசன் அவர்களுக்கு வரவேற்பளிக்கப்பட்டது; அவர், வர்த்தகக் கழகத்தின் புதிய கட்டிடத்திற்குக் கால்கோள் விழா நடத்தினார். தி. மு. க.—முத்தமிழ்க் கழகம் வரவேற்பு வாசித்தளித்தது;

தி. மு. கழகம் நாட்டுக்குச் செய்துவரும் நற்பணியை திரு இராசன் பாராட்டினார்.

கழக உறுப்பினரும், முன்னாள் நகர மன்றத் தலைவருமான திரு. எம். சண்முகம் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்தார். தேசிய கலைக்கழகத்தின் சார்பில் திருக்குறள் முனுசாமி அவர்கள் வரவேற்டளித்தார்.

# இரண்டாவது திட்டம் உருவாக்கப்படுகையில்!

### மாநிலங்களுக்கு அந்நிய செலாவணி தொகை ஒதுக்கப்படவில்லையாம்!

புதுடில்லி, டிச. 16—

மாநிலத் திட்டங்கள் உட்பட்ட இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாக்கப்படும்போது ஒவ்வொரு மாநிலங்களுக்கும் அல்லது அவைகளில் அடங்கிய குறிப்பிட்ட ஒவ்வொரு திட்டத்துக்கும், தனியாக அந்நியச் செலாவணித் தொகை ஒதுக்கப்படவில்லையாம்!

"ஆயினும், அந்நியச் செலாவணி ஆதார வசதியைப் பொறுத்தும, அந்தந்தச் சமயங்களில் நிலவும் கொள்கை, திட்டங்களின் ஒன்றுக்கொன்றுக்குள்ள முக்கியத்துவம் ஆகியவைகளின் அடிப்படையிலும் அந்நியச் செலாவணித் தொகை விடுவிக்கப்பட்டிருக்கிறது" என்று, மக்கள் சபையில துணை நிதி அமைச்சர் பி. ஆர். பகத தெரிவித்துள்ளார்.

## ஐ. நா. தொழில் நுட்ப உதவித் திட்டம

### இந்தியாவின் சந்தா அதிகரிப்பு

புதுடில்லி, டிச. 16—

"ஐ. நா. தொழில் நுட்ப உதவித் திட்டத்தில் 1958-ல், இந்தியாவின் சந்தாவை இந்திய சர்க்கார் 5,25,000 டாலருக்குச் சமமான ரூபாய் அளவுக்கு அதிகரித்திருக்கிறார்கள்; 1957-ல் இந்தத் தொகை 5 இலட்சம டாலராகும்" என்று, நிதி அமைச்சர் டி. டி. கே., மக்களசபையில் தெரிவித்துள்ளார்.

## உணவுக் கட்டுப்பாட்டில் புதியதோர் திருப்புமுனை!

பம்பாய், டிச. 14—

பம்பாய் மாநிலத்தில் உணவு, சிற்றுண்டி விடுதிகளில் மாதந்தோறும் செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் அரிசியினால் தயாரிக்கப்பட்ட உணவுப் பண்டங்களை விற்கக்கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

விருந்துகளுக்கு 50 நபர்களுக்கு அதிகமாக அழைக்கக்கூடாது என்றும் கூறப்பட்டுள்ளது.

# என். வி. நடராசன் சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

★

### மேலக்குண்டூர் (தெ. ஆ.)

தி. மு. க. சார்பில் 28-11-57 மாலை 6-30 மணிக்கு வள்ளுவர் திடலில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. சிறுமதுரைத் தோழர் டி. என். ஜி. அண்ணாமலை தலைமை வகித்தார். தோழர்கள் திருவெண்ணெய்நல்லூர் அண்ணாதாசன், முஸ்தபா ஆகியோர் பேசியபின், தோழர் என். வி. நடராசன் அவர்கள் கழகக் கொள்கையை விளக்கியும், நாட்டுப் பிரிவினையின் முக்கியத்துவத்தை விவரித்தும் சொற்பொழிவாற்றினார்; அவருக்குப் பல கிளைகளின் சார்பில் கைத்தறித் துண்டுகள் அணிவிக்கப்பட்டன. விவசாயத் தொழிலாளர்கள் ஏராளமாகத் திரண்டிருந்தனர்.

### பட்டுக்கோட்டை:

தி.மு. கழக மாணவர் கிளை

29—11—57 மாலை 6 மணிக்கு பட்டுக்கோட்டை அஞ்சல் நிலையத்திற்கு எதிரில் மாணவர் கிளைத் துவக்கவிழா சிறப்புற நடந்தேறியது. ஏராளமான மாணவர்களும் பொதுமக்களும் திரண்டிருந்தனர். சிதம்பரம் தி. மு. கழக மாணவர் கிளைச் செயலாளர் தோழர் உ. கணபதி இராமசுப்பையா தலைமை வகித்து, மாணவர்கள் கழகக் கொள்கையில் எந்த அளவுக்கு ஈடுபாடு கொள்ள வேண்டுமென்பதை விளக்கினார்.

அடுத்து அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர் கே. எஸ். கோபாலகிருஷ்ணன் இந்தி மொழி ஆதிக்கத்தை எதிர்த்துப் பேசினார்.

இறுதியாக, தோழர் என். வி. நடராசன் அவர்கள் பேசுகையில், மாணவர்கள் அரசியலில் ஈடுபாடு கொள்வதென்ற பிரச்சினையில் அண்ணா அவர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ள கருத்துகளை விவரித்தார்.

ஒவ்வொரு மாணவரும் நாட்டின் அரசியல் நிலைமைகளைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றும், ஆனால் தங்களின் கல்வித் துறையில் முதன்மையான கவனம் செலுத்த வேண்டுமென்றும் குறிப்பாகக் கழகப் பற்றுதல் கொண்ட மாணவர்கள் மற்றவர்களைவிடத் தேர்வில் முதன்மையான இடத்தைப் பெறுதல் வேண்டுமென்றும், ஓய்ந்த நேரங்களில் தாங்கள் கற்றுள்ள கருத்துக்களை நாட்டில் பரப்பும் தொண்டில் ஓரளவு ஈடுபடுதல் வேண்டுமென்றும் சுட்டிக்காட்டியதுடன், இந்தியப் பேரரசின் ஆதிக்கத்தால் தென்னகம் தாழ்ந்து சீர்குலைந்துவரும் விவரங்களைக் குறிப்பிட்டு நீண்ட நேரம் சொற்பொழிவாற்றினார்.

அவருக்கு மாணவர் கிளைகள், தி. மு. க. கிளைகள் சார்பில் கைத்தறித் துண்டுகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

### அறந்தாங்கி:

தி. மு. கழகச் சார்பில் 30—11—57 மாலை 6-30மணிக்கு வ. உ. சி. திடலில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. சுற்றுப்புற ஊர்களிலிருந்தும், நகரத்திலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்திருந்தனர். தோழர் சீனிவாசன் தலைமை தாங்கி, தேர்தலுக்குப் பிறகு கழகம் அடைந்துள்ள வளர்ச்சியினை எடுத்துக் கூறினார்.

அடுத்து, தோழர்கள் போராளி கலாநேசன், முக. மீரா, ஆ. துரையரசன் ஆகியோர் கழகக் கொள்கையினை விவரித்துப் பேசினார்கள்.

இறுதியாகத் தோழர் என். வி. நடராசன் அவர்கள் பேசுகையில், மக்கள் மன்றத்தில் இதுவரை செயலாற்றிவந்த தி. மு. கழகம், அதன் கொள்கையை சட்டசபையிலும் பரவச் செய்து அதன்வாயிலாக அனைத்திந்தியாவில் மட்டுமின்றி கூடுமானவரை அனைத்துலக அரசிலில் ஈடுபட்டுள்ளோரின் கவனத்திற்கும் கொண்டு செல்ல முயற்சித்துவருகிறது என்றும், தேர்தலுக்குப் பிறகு நமது கழகம் அடியோடு அழிந்துவிடும் என்று மனப்பால் குடித்தவர்களும், நமது கழகம் பெரும் அளவில் சட்டசபையில் இடம் பெறக்கூடாதென்ற உதவாக்கரை எண்ணம் படைத்தவர்களும் அன்று தாங்கள் செய்த பெரும் தவறுதலுக்காக — துரோகத்திற்காக இன்று வருந்துவதையும் நாம் காண்கிறோம் என்றும், இவ்வளவிற்கும் தேர்தல் காலத்தில் கழகத்திற்குக் கேடுவிளைவிக்க முயன்றவர்களின் நடவடிக்கைகளில் நியாயம் இருக்குமானால் அதற்காக வாதாடத் தயங்கியதில்லை என்பதை இன்று மக்களே அறிவார்களென்றும், கழகச் சார்பில் ஐம்பது பேர் சட்டசபையில் இடம் பெற்றிருந்தால் அண்ணா அவர்கள் அறைகூவல் விடுத்ததைப்போன்று தமிழகத்தின் அரசியல் வரலாற்றை மாற்றியமைக்க முயற்சித்திருக்கலாமென்றும், எனவே, இனியாகிலும் கழகத்தைக் கெடுக்க வேண்டுமென்ற சாதாரணஎண்ணத்தைக்கொண்டிருப்பவர்கள் நல்ல முறையில் திருந்த வேண்டுமென்று ஆசைப்படுவதாகவும் குறிப்பிட்டதுடன் மற்றும் இந்தித் திணிப்பை எதிர்க்க வேண்டியது பற்றியும் திராவிடம் தனியுரிமை பெற வேண்டியதற்காக அனைவரும் கருத்து வேற்றுமைகளை விட்டொழித்து ஒன்றுதிரள வேண்டுமென்பதையும் விளக்கிப் பேசினார். அவருக்குப் பல கிளைகளின் சார்பில் கைத்தறித் துண்டுகள் அணிவிக்கப்பட்டன. செயலாளர் மாரிமுத்து நன்றி கூறக் கூட்டம் இனிது முடிவுற்றது.

### பல்லடம்:

தி. மு. கழகச் சார்பில் 1—12—57 மாலை 6 மணிக்கு பொங்காளியம்மன் கோயில் திடலில், தோழர் அ. நல்லரசு தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் இராசகோபால், பல்லடம் பொன்னுச்சாமி ஆகியோர் வடநாட்டு ஆதிக்கத்தின் கொடுமையை எடுத்துரைத்தனர்.

இறுதியாகத் தோழர் என். வி. நடராசன் அவர்கள் நீண்டதோர் சொற்பொழிவாற்றுகையில், இந்தித் திணிப்பு, ஐந்தாண்டுத் திட்டத்தில் ஓரவஞ்சனை, தென்னகத்தின் அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்டுவரும் கொடுமைகள் ஆகிய இவைகளை எதிர்த்து நம் தாயகம் தலைநிமிர்ந்து வாழவேண்டியதின் அவசியத்தையும், அதற்கான பணியினையும் எடுத்துரைத்தார்.

ஆலைத் தொழிலாளர்களும் பொதுமக்களும் ஏராளமாக வந்திருந்தனர். பல கிளைகளின் சார்பிலும், தொழிற்சங்கங்களின் சார்பிலும் தோழர் என். வி. நடராசனுக்குக் கைத்தறித் துண்டுகள் அணிவிக்கப்பட்டன.

## விற்பனை வரி விலக்கு

சென்னை, டிச. 16—

ஆலைத் துணி, சர்க்கரை, கச்சாப் புகையிலை ஆகியவைகளுக்கு விற்பனை வரி விலக்களித்து சென்னை அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

# சேலம் மாவட்ட தி.மு.கழக மூன்றாவது மாநாடு

சேலம் மாவட்ட தி. மு. கழக 3-வது மாநாடு 1958 பிப்ரவரி திங்கள் 8, 9-ம் நாட்களில், சேலம் மாவட்டம் வேலூரில் நடைபெறும்.

மாவட்டச்செயலாளர் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராவார்.

மாநாட்டின் செயலாளராக, தோழர் பி. இராமலிங்கம் அவர்களும், பொருளாளராக, தோழர் பி. எம். குப்புசாமி அவர்களும், தொண்டர் படைத் தலைவராக தோழர் இரா. தாண்டவன் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாநாட்டுக்குத் தலைமை வகிக்கத் தோழர் மு. கருணாநிதி அவர்களை அழைப்பதெனவும்;

மாநாட்டின் திறப்பாளராகத் தோழர் கே. ஆர். இராமசாமி அவர்களை அழைப்பதெனவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

## பட்டதாரிகள், ஆசிரியர்கள் வாக்காளர் பட்டியல்

### முக்கிய வேண்டுகோள்

சென்னை மேல் (சட்ட)சபையின் பட்டதாரிகள், ஆசிரியர்கள் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல்கள் திருத்தப்படுகின்றன. இந்தப் பட்டியல்களில் சேர்க்கப்படத் தகுதியுள்ள — ஆனால், இதுவரை சேர்க்கப்படாதவர்கள், இத்தொகுதிகளின் பட்டியல்களில் தங்கள் பெயர்களையும் பதிவு செய்துகொள்ளலாம்.

விண்ணப்பப் பாரங்கள் கலெக்டர்கள், தாசில்தார்கள், டெபுடி தாசில்தார்கள், முனிசிபல் கமிஷனர்கள் ஆகியோரிடம் இலவசமாகப் பெற்று, இந்தத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களில் பதிவு செய்யப்படத் தகுதி புள்ளவர்கள் 7—1—58-க்கு முன் வாக்காளர் பதிவு அதிகாரி—அதாவது, சென்னை கலெக்டரின் அந்தரங்க உதவியாளரிடம் நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ விண்ணப்பித்துக்கொள்ள வேண்டும்.

பட்டதாரிகள் தொகுதி பட்டியலில் பதிவு செய்யப்படுவதற்கு ஒருவர்,1958 சனவரி முதல்தேதியன்று அந்தத் தொகுதியில் குடியிருந்து இருக்க வேண்டும்; மேலும், அதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அவர் இந்திய பல்கலைக் கழகம் ஒன்றின் பட்டதாரியாகவோ அல்லது அதற்கு சமமானதென்று அறிவிக்கப்பட்ட தகுதிகளோ உடையவராய் இருக்க வேண்டும்.

ஆசிரியர் தொகுதி பட்டியலில் பதிவு செய்யப்படுவதற்கு ஒருவர், 1958 சனவரி முதல் தேதியன்று இத்தொகுதியில் வாழ்ந்திருக்க வேண்டும். மேலும், அதற்கு முந்திய 6 ஆண்டுகளில் மொத்தம் மூன்று ஆண்டுகளுக்கு அவர், செகண்டரி 'தர'த்துக்குக் குறையாததென்று அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட ஏதாவதொரு பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியிருக்க வேண்டும்.

இந்தப் பட்டியல்களைப் பூர்த்தியாகவும், சரியாகவும் இருக்கச் செய்ய எல்லா அரசியல் கட்சிகளும், நிறுவனங்களின் தலைவர்களும் வழக்கறிஞர் சங்கங்களும், ஆசிரியர் சங்கங்களும், மற்றவர்களும் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். தகுதியுள்ள ஒவ்வொருவரும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு தம்மைப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

7—1—58-க்கு முன் விண்ணப்பித்துக்கொள்ளாதவர்கள், இந்த பட்டியல் பூர்வாங்கமாய் பிரசுரம் செய்யப்பட்டதும் விண்ணப்பித்துக்கொள்ளலாம். கோரிக்கைகளையும், ஆட்சேபணைகளையும் அனுப்பலாம்.

# அவசரச் சட்டம்

சென்னை, டிச. 16—

சென்னை சட்டமன்றம் நடைபெறாத காரணத்தினால் விற்பனை வரி (திருத்த) சட்டத்தை மாநிலம் முழுவதும் அமுலாக்கி சென்னை கவர்னர் அவசரச் சட்டம் பிரகடனப்படுத்தியுள்ளார்.

# 10,000 ரிக்ஷா இழுப்போர் வேலை நிறுத்தம்

## ஐதராபாத் நகரில் போக்குவரத்து நெருக்கடி

ஐதராபாத், டிச. 16—
இன்று நகரில் உள்ள சுமார் 10 000 ரிக்ஷா இழுப்போர் வேலை நிறுத்தம் செய்துள்ளனர்.

தங்களை அடிக்கடி போலீசார் தொந்தரவு செய்வதாகவும், இல்லாததும் பொல்லாததும் கூறி கைது செய்து வழக்குப் போடுவதாகவும், இதனை எதிர்த்தே வேலை நிறுத்தம் என்றும் அவர்கள் அறிவித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

பள்ளி செல்லும் மாணவர்கள், சர்க்கார் ஊழியர்கள் எல்லாரும் இந்த வேலை நிறுத்தத்தால் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

சர்க்கார் வட்டாரங்களோ, சுமார் 4,000 ரிக்ஷாக்கள் லைசென்ஸ் இன்றி ஓடிக்கொண்டிருப்பதாகவும், இதனைத் தடுக்கவே போலீசார் அவர்களைக் கைது செய்வது தவிர்க்கமுடியாததாக இருப்பதாகவும் கூறுகின்றன.

# ஷேக் அப்துல்லா விடுதலை?

## காஷ்மீர் மந்திரி சபை முடிவு ?

ஸ்ரீநகர், டிச. 16—
காஷ்மீரின் முன்னாள் பிரதமர் ஷேக் அப்துல்லாவை விடுதலை செய்வது என மந்திரிசபை முடிவு செய்துவிட்டதாக அதிகார வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அடுத்த மாதத்திற்குள் அவர் விடுதலை செய்யப்படுவார் என்றும் அவை கூறுகின்றனவாம்.

ஷேக் அப்துல்லா, கடந்த 1953 ஆகஸ்டு திங்கள் முதல் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுச் சிறையிலிருப்பது தெரிந்ததே.

அண்மையில் கூட்டம் ஒன்றில் பேசுகையில் பிரதமர் பக்ஷி குலாம் முகம்மது, ஷேக் அப்துல்லாவைப் பற்றிக் குறிப்பிட்டதாகவும், 'ஷேக் சிறையிலிருப்பது எனக்கு ஒன்றும் மகிழ்ச்சியைத் தரவில்லை—தொடர்ந்து அவரை சிறை வைத்திருப்பதும் எனக்குப் பிடிக்கவில்லை' என்று கூறியதாகவும் தெரியவருகிறது.

அண்மையில், டெல்லி பாராளுமன்றத்தில், தடுப்புக்காவல் சட்டத்தை நீடிப்பது பற்றி விவாதம் நடைபெற்றபோது கம்யூனிஸ்டு தலைவர் டாங்கே, ஷேக் அப்துல்லா விடுதலை செய்யப்பட வேண்டும் என்று வற்புறுத்திப் பேசியதும் நினைவில் கொள்ளத் தக்கது.

# டெலிபோன்

## உரையாடலில் குறுக்கீடு!

### மாநிலங்கள் சபையில் உரிமைப் பிரச்சினை

புதுடில்லி, டிச. 16—
தனது டெலிபோன் பேச்சுக்களில் சர்க்காரின் குறுக்கீடு தினந்தோறும் நடைபெறுவதால், தன்னால் மக்கள்சபை உறுப்பினராகப் பணியாற்றுவது கஷ்டமாயிருக்கிறது என்றும், உறுப்பினர் என்ற முறையிலும், குடிமகன் என்ற முறையிலும் தனது உரிமைகள் பாதிக்கப்படுவதாகவும் கம்யூனிஸ்டு உறுப்பினர் பூபேஷ் குப்தா, மாநிலங்கள் சபையில் ஒரு உரிமைப் பிரேரணையைக் கொண்டுவந்தார்.

சர்க்கார் இதுபற்றி என்ன சொல்லவிருக்கிறது என்று கண்டு சொல்வதாக சபைத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் கூறியிருக்கிறார்.

### சாதி வெறியர்கள் கைது!

வாரணாசி, டிச. 15—
காசி விசுவநாதர் ஆலயத்திற்குள் இன்று 60 தாழ்த்தப்பட்ட மக்கள் நுழைந்தபோது, அவர்களை சுமார் 100 (சனாதனிகள்) சாதி வெறியர்கள் தடுத்து, கதவைத் தாளிட்டுக்கொண்டனராம்; இதனால் ஏற்பட்ட கைகலப்பில் 30 சாதி வெறியர்களைப் போலீசார் கைது செய்தனராம.

### வேடிக்கை போகிறாரா— வேதனைப்படுகிறாரா?

ரூர்கேலா, டிச. 17—
பண்டித நேரு 'யாகம்' செய்வதைக் கண்டித்தார்; இதனைச் செய்வதால் அரிசி, நெய்போன்ற உயர்ந்த உணவுப் பொருள்கள் நீக்கிரையாக்கப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

மனித சமுதாயம் தன் சொந்த முயற்சியில் அதிக நம்பிக்கை வைக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார.

### கேரளத்தில் பள்ளி ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்

திருவனந்தபுரம், டிச. 16—
நேற்று இங்கு சுமார் 5,000 அரசாங்கப் பள்ளிக்கூட ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

அனுபவத்தைக் கண்டறிந்த புதிய ஊதிய விகிதம் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்பது அவர்களுடைய கோரிக்கை.

முக்கிய தெருக்களின் வழியாக அவர்கள் ஊர்வலமாகச் சென்று, பொது கூட்டம் நடத்தியுள்ளனர்.

# கழகக் கூட்டங்கள்

★

**கோபிசெட்டிபாளையம்**
பெரியார் திடலில்
18—12—57 மாலை 6-மணிக்கு
தலைவர் : மணிதுரைஅம்மையார்
பேசுவோர் :
அருண்மொழி
ஏ. கே. வில்வம்

★

**முத்தனம்பாளையம்**
(கரூர் வட்டம்)
19—12—57 இரவு 7 மணிக்கு
பேசுபவர் :
க. அன்பழகன் எம்.எல்.ஏ.
என். இரத்தினம்
மு. குழந்தைவேல்
சண்முகம்

★

**சீலப்பட்டி** (தேன்னிலை)
19—12—57 மாலை 5 மணிக்கு
பேசுவோர் :
க. அன்பழகன் எம்.எல்.ஏ.
மு. குழந்தைவேலு
என். இரத்தினம்

## பொன்னம்பலனுக்கு வரவேற்பு

### ஒரு திருத்தம்

நேற்று 'நம் நாடு' இதழில் 4-ம் பக்கத்தில் வெளியான 'பொன்னம்பலனுக்கு வரவேற்பு' என்னும் செய்தியில், 'மேற்படி வரவேற்பு நிகழ்ச்சி சென்னை 9-வது வட்ட தி. மு. க. கிளையின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது' என்பதைச் சேர்த்துப் படிக்க வேண்டுகிறோம்.—(ஆ-ர்.)

## நேபாள மக்கள் வெற்றி

காட்மெண்டு, டிச. 15—
நேபாளத்தின் முதல் பொதுத் தேர்தல் 1959-ம ஆண்டு பிப்ரவரி திங்கள் நடத்தப்படும் என்று நேபாள மன்னர் அறிவித்துள்ளார்.

கடந்த 9 நாட்களாக மக்கள் இதற்காக அறப்போர் நடத்திவந்துள்ளது தெரிந்ததே.

# வடார்காடு மாவட்ட

## தி. மு. க. செயற்குழுக் கூட்டம்

22-12-57 மாலை 2-மணிக்கு, திருவண்ணாமலைஇராமநாதன் செட்டியார் ஹாலில் (காந்தி சிலைக்கு அருகில்) மாவட்டச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அவ்வமயம், கீழ்க் கண்ட பொருள்கள் ஆய்வுக்கு வரும்; உறுப்பினர்கள் இதையே அழைப்பாகக் கொண்டு, தவறாது வருகை தர வேண்டுகிறேன்.

பொருள் :—
1. மாநாட்டு வரவு-செலவு.
2. மத்திய கழகத்திற்கு நிதி அளித்தல்.
3. இதர விஷயங்கள்.

என, மாவட்டச் செயலாளர் தோழர் முல்லை-சத்தி அவர்கள் அறிவிக்கிறார்.

# சென்னையில் தமிழ் விழா

"சென்னை மணவழகர் மன்றச் சார்பில், 1958 சனவரி 15, 16, 17, 18, 19 ஆகிய நாட்களில், கோகலே மண்டபத்தில், மிகச் சிறப்பான முறையில் மேற்படி விழாவை நடத்த முயற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன; இந்த நாட்களில் முறையே, இரா. நெடுஞ்செழியன், எம் கே. சண்முகம், ரா. பி. சேதுப்பிள்ளை, அண்ணா, கி ஆ. பெ விசுவநாதம் ஆகியோர் தலைமையில் அறிஞர்கள் பலர் சொற்பொழிவாற்றுவர்."

என, மணவழகர் மன்றச் சார்பில் தோழர் சிறுவை-மோகனசுந்தரம் அறிவிக்கிறார்.

## திருக்குறள் வகுப்பு

18—12—57 மாலை 6-30 மணிக்கு, பெத்துநாயக்கன்பேட்டை முருகேசமுதலித் தெரு 2-ம் எண்ணுள்ள கட்டிடத்தில் மணவழகர் மன்றச் சார்பில், திருக்குறள் வகுப்பு, புலவர் ர. சி. தனக்கோட்டி அவர்களால் நடத்தப்பெறும்.

# குந்தா நீர் மின்சாரத்திட்டம்

## மேலும் 50 லட்சம் டாலர் உதவி

### சென்னை சர்க்கார் கோரிக்கையை கனடா ஏற்றது

சென்னை, டிச. 16—
நீலகிரியில் குந்தா நீர் மின்சாரத் திட்டத்திற்காக, கொழும்புத் திட்டத்தின்கீழ் மேலும் 50 இலட்சம் டாலர் உதவி அளிக்க வேண்டுமென்ற சென்னை சர்க்காரின் கோரிக்கையை கனடா சர்க்கார் ஏற்றுக்கொண்டுவிட்டதாகத் தெரிகிறது.

ரூ. 32 கோடி திட்டமான இதற்கு, ஏற்கனவே கனடா சர்க்கார் ரூ. 10 கோடிவரை (அதாவது 2 கோடி டாலர்) உதவி செய்துள்ளனர்; மேலும், ரூ. 3 கோடி உதவி வேண்டுமென சென்னை சர்க்கார் கேட்டது; இதனை கனடா சர்க்கார் ஏற்றுக்கொண்டதாகத் தெரிகிறது.

### பொம்மலாட்டக் கலை புதுப்பிக்கப்படுமாம்!

புதுடில்லி, டிச. 16—
புதுடில்லியில் உள்ள புராதன கலா நிலையத்திற்கு மத்திய அரசாங்கம் ரூ. 22,000 மானியமளித்துள்ளது என்றும் இந்தத் தொகையில் பண்டைய பொம்மலாட்டக்கலை புதுபிக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

### சாதி முறைக்கு 'இந்து' மகாசபை பாதுகாப்பு?

புதுடில்லி, டிச. 16—
நாட்டில் சாதிகள் ஒழிக்கப்பட வேண்டும் என்ற உயரிய பண்புடன் திராவிடர் கழகம் நடத்தி வரும் பணிக்கு எதிராக டெல்லியிலிருந்து சென்னைக்கு வந்து, இந்து மகாசபை வேலை செய்யப் போகிறதாம்!

### மணிக்கு 1,242 மைல்!

மாஸ்கோ, டிச. 16—
பிரிட்டிஷ் ஆராய்ச்சி விமானம் மணிக்கு 1,232 மைல் வேகத்தில் பறந்துள்ளது; அமெரிக்காவின் 'வூடு' வேட்டை விமானம் மணிக்கு 1,207 மைல் வேகத்தில் பறந்துள்ளது; இப்போது ரஷ்யாவின் ஜெட் வேட்டை விமானம் மணிக்கு 1,242 மைல் வேகத்தில் பறந்துள்ளதாக 'டாஸ்' அறிவித்துள்ளது,

### க. அன்பழகன்

எம். எல். ஏ. சுற்றுப்பயணம்

டிசம்பர்
19 : மாலை 5 மணி : சீலம்பட்டி
இரவு 7 மணி : முத்தனம் பாளையம்
21, 22, 23 : சேலம் மாவட்டம் (விவரம் பின்னர்)

### சத்தியவாணிமுத்து

எம்.எல்.ஏ. சுற்றுப்பயணம்

டிச. 20 : போளியம்மனூர் (திண்டுக்கல் வட்டம்)
,, 21 : பழனி
,, 22 : காலை—கருமலை (எஸ்டேட்)
மாலை—பொள்ளாச்சி

சென்னை 48-வது வட்ட தி. மு. க. செயற்குழு உறுப்பினர்களுக்கு :

18—12—57 மாலை 7 மணிக்கு, சைதை, சடையப்பமுதலி தெரு, 2 எண்ணுள்ள இல்லத்தில் மேற்படி வட்ட தி. மு. க செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

# நாஞ்சில் மாவட்ட தி. மு. கழக 2-வது மாநாடு

## 27, 28-12-57 வெள்ளி, சனிக்கிழமைகளில்

### நாகர்கோவிலை அடுத்த கிருஷ்ணன் கோவிலில்

கலைவாணர் பந்தலில்—சாமி அரங்கில் நடைபெறும்.

★

தலைவர் : ஈ. வெ. கி. சம்பத் M.P. | திறப்பாளர் : டாக்டர் ஏ. அருணாசலம்

★

**அண்ணா, போதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன்**

மற்றும் கழக முன்னணி வீரர்கள் அனைவரும் பங்கேற்கின்றனர்.

**முதல் நாள் :**
27—12—57 வெள்ளி இரவு
**எம். கே. கோவிந்தராச பாகவதர்**
(எம். கே. தியாகராச பாகவதர் இளவல்)
அவர்களின தீந்தமிழ்ப் பாடல்கள் மக்களை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்தும்.

**இரண்டாம் நாள் :**
28—12—57 சனி இரவு
வலையாபதி புகழ் முத்துக்கிருஷ்ணன் குழுவினரின்
**'மனித இதயம்'**
எனும் நாடகம் மக்களின் இதயத்தைத் தொட்டு, உற்சாகத்தின் எல்லைக்கு அழைத்துச் செல்லும்.

கரங்கூப்பி, ஒளிமுகங்காட்டி, குமரிமுனை உங்களை அழைக்கிறது;
அனைவரும் கூடுங்கள்; விடுதலை முரசு கொட்டுங்கள்!

ஏ. இராமசாமி, பி. சாம் B.A., B.L.
செயலாளர்கள்

கி. மனோகரன் M. A.
வரவேற்புக்குழுத் தலைவர்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.